பக்கங்கள் 25 + 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை 18.05.2024 | அதிர்வு 287



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# முள்ளிவாய்க்காலில் திரண்டது தமிழினம்

## இறுதிப் போரில் உயிர்நீத்த தமது உறவுகளுக்கு பல்லாயிரக்கணக்கானோர் கண்ணீரால் அஞ்சலி

**இறுதிப் போரில் கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்ட தமிழினப் படுகொலையை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பிரதான நிகழ்வு இன்று மிகவும் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்டு இறுதிப் போரில் உயிர்நீத்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.**

இன்றைய 16 ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் முற்பகல் 10.15 மணிக்கு கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. 10.29 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு 10.30 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.31 மணிக்கு உறவு ஒருவர் பொதுச் சுடர் ஏற்றிவைக்க – முள்ளிவாய்க்கால் கீதங்கள் இசைக்க – சமநேரத்தில் ஏனைய சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

உயிர்நீத்தவர்களின் உறவுகள் கதறியழ, கண்ணீர் மழையில் முள்ளிவாய்க்கால் முற்றம் நனைந்தது.

(மேலதிக படங்கள் 3, 4, 5 ஆம் பக்கங்களில்)











# கொழும்பில் வெள்ளவத்தையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

## சுமந்திரன் வந்த போது 'கொட்டியா' என்று காட்டுக் கூச்சல்

முள்ளிவாய்க்கால் நிலைவேந்தல் நிகழ்வு இன்று நண்பகலுக்கு சற்று முன்னர் கொழும்பில் வெள்ளவத்தையில் கடற்கரையோரம் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அங்கு வருகை தந்த போது, அப்பகுதியில் நின்ற பேரினத்தவர்கள் சிலர் ஒன்று கூடி 'கொட்டியா, கொட்டியா' என்று அவருக்கு எதிராகக் கூச்சலிட்டு களேபரம் பண்ணினர். எனினும் பொலிஸார் அவர்களை நிகழ்வு நடைபெறும் கடற்கரை ஓரத்துக்கோ அல்லது நிகழ்வுக்கு பங்குபற்ற வந்த சுமந்திரனை நெருங்கவோ இடமளிக்காமல் பார்த்துக் கொண்டனர்.

கடற்கரை ஓரத்தில் அக வணக்கம் செலுத்தி, ஈகச்சுடர் மற்றும் பொதுச்சுடர் ஏற்றி யுத்தத்தின் இறுதி கட்டத்தில் உயிரிழந்த ஆத்மாக்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.











# கண்ணீர் மழையில் நனைந்த முள்ளிவாய்க்கால் முற்றம்!

## பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் திரண்டு அஞ்சலி





















# கண்ணீர் மழையில் நனைந்த முள்ளிவாய்க்கால் முற்றம்!

## பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் திரண்டு அஞ்சலி
























# கண்ணீர் மழையில் நனைந்த முள்ளிவாய்க்கால் முற்றம்!

## பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் திரண்டு அஞ்சலி











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நிரூபிப்போம்!

தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தைக் கருவறுக்க பௌத்த - சிங்களப் பேரினவாதம் பேயுருக் கொண்டு, இனவழிப்புச் சந்நதமாடி, பல லட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த கொடூரக் காதையின் அவல அத்தியாயம் ஒன்று பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய தினத்தில் முள்ளிவாய்க்காலோடு முடிவுற்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்ட தமிழினப் படுகொலையை நினைவுகூரும் 16ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்றாகும்.

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவியும், புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் தேசங்களிலும் இந்த நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது. அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது

அந்த வகையில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது அங்கு-அந்தப் பிராந்தியத்தில் - யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்ட நம் தமிழ் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி நினைவு கூரும் நாள் மட்டுமல்ல, அந்தப் பேரழிவுகளுக்கு நீதி கோருவதும், அந்தக் கொடூரக் கோரங்களைப் புரிந்த பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க கொடூர சக்திகளை உலகின் முன் அம்பலப்படுத்தி, இறந்த நம் உறவுகளின் ஈகத்துக்கான நீதியை தேடுவதற்கு நாங்கள் பற்றுறுதி கொண்டு, திடசங்கற்பத்தோடு இருக்கின்றமையை மீண்டும் ஒரு தடவை ஓங்கி முரசறையும் நாளும் கூட.

அது மட்டுமல்ல, அந்த ஆத்மாக்கள் எதற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்களோ, அந்த இலக்கை - இலட்சியத்தை - அடைவதற்காக தமிழர் தேசம் ஒன்றுபட்டு நின்றது என்பதையும், அந்தக் கருத்தியலில் அது தொடர்ந்து ஒன்றுபட்டு நிற்கும் என்பதையும் வெளிப்படுத்தும் கூட்டுணர்வு நடவடிக்கையாக இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அமைய வேண்டும்.

தமிழர் தாயகத்தை இரும்புச் சட்டத் திரை மறைவுக்குள் பொத்தி, மூடி வைத்துக் கொண்டு சிங்கள பேரினவாதம் புரிந்த அராஜகம், பதினாறு ஆண்டுகள் கடந்தும் இன்னும் உலகின் செவிப்பறையில் சரியாக ஒலிக்கவில்லை. உலகின் கண்களுக்கு இன்னமும் தெளிவாகப் படவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இவ்விவகாரத்தில் பொறுப்புக் கூறலுக்கான நடவடிக்கையாக இந்த விடயங்களை ஒட்டி ஆதாரங்கள், சான்றுகளைத் திரட்டிப் பதிந்து வருகின்ற போதிலும், அவற்றை முழுமைப்படுத்தி, உண்மையை ஆதாரங்களோடு ருசுப் படுத்தும் நடவடிக்கைகளை நாம் இன்னும் பூர்த்தி செய்யவில்லை.

முள்ளிவாய்க்காலோடும் முடிவுற்ற அந்த பேரவலத்தின் போதும், இப்போது தொடர்கின்ற இன அடக்கு முறையின் மூலமும் இந்தத் தீவில் பேரினவாதம் முன்னெடுப்பது யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் மட்டுமல்ல, அவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய இன வழிப்புத்தான் என்பதை உலகின் முன்னால் நாம் நிரூபிக்கும் போது தான் முள்ளிவாய்க்காலோடு தம்மை ஆகுதியாக்கிய நமது உறவுகளின் ஆத்மாக்கள் சாந்தி அடையும். அதைச் செய்ய இன்றைய நாளில் மீண்டும் உறுதி எடுப்போம்.







# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

(கி.வசந்தன்)

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கான 16 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு வவுனியாவில் கண்ணீர் மல்க இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் 3011 ஆவது நாளாகப் போராட்டம் மேற்கொண்டு வரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக உள்ள கொட்டகையில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்த உறவுகளுக்காக கண்ணீர் மல்கி கதறியழுத உறவுகள் அகவணக்கம் செலுத்தி, ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செய்யப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

“இந்த நாள் மிகவும் வேதனையானது. போரின் கொடூரமான முடிவை நினைவூட்டுகின்றது. அங்கு ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அந்தப் போர் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவாக மட்டுமல்ல, தமிழர் துன்பங்களுக்கு உலகளாவிய அலட்சியத்தின் விளைவாகவும் இருந்தது. முழு உலகமும் நம்மைப் புறக் கணித்தது, முள்ளிவாய்க்காலை தமிழர் நம்பிக்கையின் கல்லறையாக மாற்ற அனுமதித்தது.

இன்று, முள்ளிவாய்க்கால் நாளில், உலகுக்கு நினைவூட்டுகின்றோம். எங்கள் வலி தொடர்கின்றது. எங்கள் போராட்டம் தொடர்கின்றது. நீதி மற்றும் சுதந்திரத்துக்கான எங்கள் கோரிக்கை ஒருபோதும் அமைதியாகாது.” – என்றனர்.











# மன்னாரில் உருக்குலைந்த நிலையில் கரை ஒதுங்கிய ஆண் ஒருவரின் சடலம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

இந்தச் சடலம் நேற்று இரவு அந்தப் பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது

மேற்படி ஆணின் சடலம் முற்றிலும் சிதைவடைந்துள்ள போதும் சிதைவடையாமல் காணப்படும் ஆடைகளை வைத்து அவருக்கு 30 வயதுக்கு மேல் இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



மீனவர்கள், அச்சங்குளம் கிராம சேவையாளருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து கிராம சேவையாளர், முருங்கன் பொலிஸார் மற்றும் அச்சங்குளம் கடற்படையினர் சடலத்தைப் பார்வையிட்டனர்

சடலத்தை மீட்ட முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கல்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை, தம்பலகமம், நாயன்மார் திடல், கிண்ணியா, தம்பல காமம் பிரதான வீதியில் முள்ளிவாய்க் கால் நினைவு கஞ்சி நேற்று சனிக் கிழமை (17) மாலை வழங்கி வைக்கப் பட்டது.

இதனை தமிழ் தேசிய மக்கள் முன் னணியின் தம்பலகாமம் பிரதேச இணைப்பாளர்கள் இணைந்து முன்னெ டுத்தனர். இதில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறி யுள்ளன.

இதன் போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த வர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் இடம் பெற் றது.









# ‘கிழக்கின் நூறு சிறுகதைகள்’ அறிமுக நிகழ்வு மட்டக்களப்பில்!





(கல்லடி செய்தியாளர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் “கிழக்கின் நூறு சிறுகதைகள்” தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு நேற்று சனிக்கிழமை (17) மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், குவைத் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதவர் பாலசுப்பிரமணியம் காண்டீபன்,

தொடர்ச்சி▼

# ‘கிழக்கின் நூறு சிறுகதைகள்’ அறிமுக நிகழ்வு மட்டக்களப்பில்!

தொடர்ச்சி▲

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். பிரகாஷ், கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், சிரேஷ்ட எழுத்தாளர் உமா வரதராஜன், தென் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் ரசாக், மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பார்த்தீபன்



மற்றும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது “கிழக்கின் 100 சிறுகதைகள்” தொகுப்பு நூல் நிகழ்வின் அதிதிகள் உட்பட எழுத்தாளர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட எழுத்தாளர் உமா வரதராஜன் மற்றும் நூலை பதிப்பித்த வணசிங்கா பதிப்பகத்தினர் ஆகியோர் அதிதிகளால் கௌரவிக் கப்பட்டனர்.






# முல்லைத்தீவு மாவட்ட மட்ட நீச்சல் போட்டி!

(பா.சதீசன் )

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு துறையினரின் ஒழுங்குபடுத்தலில் 2025 ஆம் ஆண்டுக்கான முல்லைத் தீவு மாவட்ட மட்டத்திலான நீச்சல் போட்டி நேற்று (17) காலை இடம்பெற்றது.

தேசிய மரதனோட்ட முன்னாள் வீரர் கந்தசாமி பத்மநாதனின் நிதி அனு சரணையோடு குமுழமுனை கொட்டுக் கிணற்று பிள்ளையார் ஆலய நீச்சல் தடாகத்தில் மழைக்கு மத்தியில் போட்டிகள் இடம்பெற்றன.

போட்டியில் இளைஞர்களுக்கான 50 மீற்றர், 100மீற்றர் நீச்சல் போட்டியும், அஞ்சல் ஓட்ட நீச்சலும் இடம்பெற்றறன. போட்டியில் வெற்றியீட்டிய வீர வீராங் கனைகளுக்கு பதக்கங்கள் அணி விக்கப்பட்டு, சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இ. சகீதரசீலன், இலங்கை உயிர் காக்கும் நீச்சல் பயிற்றுவிப்பாளர் ஆர்.லஜீவன், தேசிய மரதனோட்ட முன்னாள் வீரர் கந்தசாமி பத்மநாதன் (கனடா), புலம்பெயர் உறவு கந்தசாமி நுட்பராசா மற்றும் சமூக ஆர்வலர்கள், முல் லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# கரைச்சி, பூநகரி தவிசாளர், பிரதித் தவிசாளர் நியமன சர்ச்சை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை ஆகியவற்றின் தவிசாளர், பிரதித் தவிசாளர் நியமனங்கள் தொடர்பாக எழுந்த சர்ச்சை இன்று முற்பகல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டதாக அறியவந்தது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் செயலாளராக சுமந்திரனை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்தார் எனக் கூறப்படும் சர்ச்சையை அடுத்து, அந்த நியமனங்களுக்கான கடிதத்தில் தாம் ஒப்பமிட மாட்டார் என சுமந்திரன் நேற்றைய கூட்டம் ஒன்றில் அறிவித்திருந்தார்.

எனினும் கட்சியின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், மேற்படி பிரதேச சபைகளுக்கு கட்சியின் மாவட்டக் கிளையினால் பரிந்துரைக்கப்பட்ட தவிசாளர்கள் போன்றோருக்கும் சுமந்திரனுக்கும் இடையில் இன்று காலையில் தொலைபேசி ஊடாக நடைபெற்ற உரையாடல்களைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்டகடிதங்களை ஒப்பமிட்டுத் தேர்தல் ஆணையத்துக்கு மூலப் பிரதியை ஒப் படைக்கும் நடவடிக்கையை சுமந்திரன் முன்னெடுத்தார் என அறிய வந்தது.





# திருகோணமலை சிவன்கோயிலடியில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை சிவன்கோயிலடி முன்றலில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி நேற்று (17) மாலை வழங்கப்பட்டது.

கஞ்சி வழங்கும் நினைவேந்தல் நிகழ்வை திருகோணமலை மாவட்ட வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போன உறவுகள் சங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகள், நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.

இதன் போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில், காணாமல் போனோரின் உறவுகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்தனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர்.

நிகழ்வு, சமூக நினைவாற்றலை பாதுகாத்து, இனநீக்கம், உயிரிழப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் எதிர்வினையாகவும் அமைந்தது.









# கிராமிய அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது தொடர்பில் ஆய்வு!





(சர்ஜூன் லாபீர்)

தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் கிராம மக்களின் பங்கேற்புடன் கிராமிய அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் தொடர்பான ஆரம்ப நிகழ்வு நேற்று (17) தமிழ் பிரிவு-01 கிராம சேவகர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.டபிள்யூ சித்தி நதீரா தலைமையில் இடம்பெற்றது.

இநத் நிகழ்வுக்கு பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லமின், வழிகாட்டுதலின் கீழ் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டார்.

கிராம மக்களை நேரடியாக பங்கேற்புச் செய்து அந்த மக்களின் கிராம மட்ட பிரச்சினைகள் சம்மந்தமாகவும் அதற்கான தீர்வு திட்டங்களும், முன்மொழிவுகளும் இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக நேரடியாக கேட்டறிந்து கொள்ளப்பட்டது. கிராமிய அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கு உரிய மக்கள் பங்களிப்பு சார்பான உபாயங்களும் பயன்படுத்தப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 51 கிராம சேவகர் பிரிவுகளிலும் இந்தச் செயற்றிட்டம் இன்றில் இருந்து கிராம மட்ட உத்தியோகத்தர்களின் முழுமையான பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கிராம சேகவர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






### தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு

# நீதியான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு எம்.பி. டாக்டர் சிறிநாத் தெரிவிப்பு

(வாலகிருஸ்ணா)

தமிழ் மக்கள் இந்த நாட்டில் இனப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்ற நிகழ்வு இன்று புலம்பெயர் நாடுகளில் மிக அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதற்கு இந்த அரசு தெரிவிக்கும் எதிர்ப்பானது தமிழினப் படுகொலையை மூடிமறைப்பதற்கான ஒரு செய்தியாக அரசு முயற்சிக்கின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அதனைவிடுத்து தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஒரு நீதியான தீர்வைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை இந்த அரசு முன்னெடுக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஆறாவது நாளான நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மண்முனை வடக்கு கிளையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பிள்ளையாரடியில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மண்முனை வடக்கு கிளையின் தலைவர் சிவம்பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.சிறிநாத், கட்சியின் முன்னாள் செயலாளர் கி.துரைராஜசிங்கம், தமிழீழ விடுதலை இயக்கத்தின் சிரேஷ்ட பிரதித் தலைவர் பிரசன்னா இந்திரகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது இறுதி யுத்தத்தின்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து இறுதி யுத்த காலப் பகுதியில் மக்கள் உணவாக கொண்ட உப்பில்லா கஞ்சி பகிரும் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

கொத்தணி குண்டுகளாலும் இரசாயனக் குண்டுகளாலும் ஒரு சிறிய பகுதிக்குள் அவர்கள் ஒடுக்கப்பட்டு மக்கள் வெளியேறிச் செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டு பாரிய கொடூர இனஅழிப்பு நடைபெற்ற தினமாக மே 18 காணப்படுகின்றது.

இந்தத் தினத்தை ஒருவாரகால அந்த துக்கதினமாக எங்களின் தமிழரசுக்கட்சியானது அனைத்து பகுதிகளுக்கும் தமிழ் மக்களின் செய்தியாக கொண்டுசெல்கின்றோம்.

தமிழ் மக்களின் இந்த இழப்புகளை தமிழ் மக்களின் விடுவிக்காக கொண்டு செல்லப்படவேண்டும். இது தொடர்பில் எதிர்கால சந்ததிகள் இதனை உணர்ந்து கொண்டு தொடர்ச்சியாக இதனை முன்னெடுக்க வேண்டும்.

தமிழினம் இந்த நாட்டில் பல வழிகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுவரும் இனமாக உள்ளது. சமகாலத்தில் கூட பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதனை இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் இனப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்ற நிகழ்வு இன்று புலம்பெயர் நாடுகளில் மிக அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதற்கு இந்த அரசு தெரிவிக்கும் எதிர்ப்பானது தமிழினப் படுகொலையை மூடிமறைப்பதற்கான ஒரு செய்தியாக வெளிப்படுத்த முயற்சிகின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதனை விடுத்துத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஒரு நீதியான தீர்வைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை இந்த அரசு முன்னெடுக்க வேண்டும்.

அதேநேரம் தமிழ் மக்கள் தமிழ் தேசியத்துக்கான தமது இன்னுயிர்களை இழந்த மக்களுக்காக அஞ்சலி செலுத்தப்படும் இந்த நிகழ்வுகளில் தமிழ் மக்கள் தமது ஆத்மார்த்தமான உணர்வுகளை அர்ப்பணிக்க வேண்டும்.- என்றார்.








# ஆஸ்திரேலியா - இலங்கை மாணவர் நிதிய உதவிகள் மலையக மாணவருக்கு வழங்கல்

ஆஸ்ரேலியாவில் இருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவி, அண்மையில் மலையக மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

கல்வி நிதியத்தின் மலையக தொடர்பாளர் அமைப்பான மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கண்காணிப்பில் இந்த உதவி வழங்கப்பட்டுவருகிறது.

குறிப்பிட்ட அமைப்பின் தலைவர் அரியமுத்துவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவி பெறும் மாணவர்கள் மற்றும் மாணவர்களின் தாய்மாரும் கலந்து கொண்டனர்.

அமைப்பின் உறுப்பினர் மு.துவாகரன் மற்றும் ஆலோசகர் ஏ.ஜெயசீலன், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் இந்த நிதியத்தின் நிதியுதவியைப் பெற்ற மாணவர் பலர் தரம் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தர பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சைகளில் தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்று உயர் கல்வியைத் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை பிராந்தியப் பொலிஸாரால் 82 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் விசேட போக்குவரத்து பொலிஸாரால் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று இந்த திடீர் சோதனை நடவடிக்கை கல்முனை புற நகரப் பகுதி முதல் சாய்ந்தமருது புறநகர் கடற்கரை வீதி போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திடீர் சோதனையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, மிக ஒலி எழுப்பிய மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன் வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகளும் பொலிஸாரால் வழங்கப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை சம்மாந்துறை சவளைக்கடை சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொலிஸார் இணைந்து முக்கிய சந்திகள் பிரதான புற நகர வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது 82 பேருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தி கோட்டமட்ட போட்டியில் சாதனை

(நூருல் ஹுதா உமர்)

2025 ஆம் ஆண்டுக்கான சாய்ந்த மருது கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் கடந்த வாரம் கல்முனை சாஹிரா கல்லூரி மைதானத்தில் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா அப்துல் மலீக் தலைமையில் நடைபெற்றது.

இந்த போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிய சாய்ந்தமருது கல்முனை லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் 16 முதலாமிடங்கள், 14 இரண்டாமிடங்கள், 18 மூன்றாம் இடங்கள் அடங்கலாக மொத்தமாக 48 வெற்றியிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் இணைப்பாடவிதான பொறுப்பதிபர் எம்.எப்.எம்.ஆர். ஹாத்தீம் தலைமையில் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ. ஆபாக் ஆகியோரின் அயராத பெரு முயற்சியால் மாணவர்கள் இந்த வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கும், மற்றும் பயிற்றுவித்த ஆசான்களுக்கும் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், ஏனைய ஆசிரியர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

இந்தப் போட்டிகளில் 1 ஆம், 2 ஆம் இடங்களைப் பெற்றவர்கள் எதிர் வரும் வாரங்களில் நடைபெறவுள்ள வலயமட்ட போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.







# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரத்ததானம் செய்தனர் 114 மாணவர்!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட மாணவர்களால் இன்று (மே 18) இரத்ததான முகாம் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முகாமுக்கு பல்கலைக்கழக சமூகத்திடமிருந்து அமோக வரவேற்பு கிடைத்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது 114 மாணவர்கள் இரத்த தானம் செய்ய முன்வந்தனர். இந்த தாராளமான முன்முயற்சி உள்ளூர் சுகாதார அமைப்பை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டது என்றும் தன்னார்வ இரத்த தானம் உயிர்களைக் காப்பாற்ற உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வு மருத்துவ உதவி மற்றும் வழிகாட்டுதலுக்காக மருத்துவமனை ஊழியர்களுக்கும், ஆர்வத்துடன் பங்கேற்ற மாணவர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் ஏற்பாட்டாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

இந்த நிகழ்வு தன்னார்வத் தொண்டின் உணர்வை ஊக்குவித்தது மட்டுமன்றி சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளில் இளைஞர்களின் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தது என்றும் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர்.












## சர்வதேச அங்கீகாரம் பெறுகிறது

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை...!

■ நவீனன்

கனடா பிரம்ப்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு கடந்த வாரம் மே பத்தாம் நாள் இடம்பெற்றிருந்தது.

**கனடா பிரம்ப்டன் நினைவுத் தூபி**

தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபி, நீதிக்கும் உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்ததை காணக் கூடியதாக உள்ளது.

அத்துடன் தமிழர் இனப்படுகொலை நடைபெறவில்லை என மறுப்பவர்களுக்கு கனடாவில் இடமில்லை என்று பிரம்டன் மேயர் மேலும் தெரிவித்துள்ளார்.

கனடா பிரம்டனில் நினைவுத் தூபி திறக்கப்பட்டுள்ளமை எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருணமாகும் என்று கனடாவின் நீதியமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி தெரிவித்திருந்தார்.

தமிழீழத்தில் யுத்தத்தில் உயிரிழந்த பல்லாயிரக் கணக்கான தமிழீழ மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நிலைவாலயம், கனடா அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் இந்த தூபி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் தமிழர்களுக்கான நினைவேந்தலின் மாதமாக அமைந்துள்ள மே மாதத்தை முன்னிட்டு இந்த நினைவுச் சின்னம் நீதிக்கும், உண்மைக்கும், தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது.

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சாட்சியம்**

இனஅழிப்பு போரை முன்னெடுத்த ஒரு முன்னாள் தலைவரே, அதனை ஏற்றுக் கொள்வதானது சர்வதேச அளவில், ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதொரு முக்கிய சாட்சியமாகவே இருக்கும்.

முப்பது ஆண்டுகளாக நடந்த ஈழப்போரை, சந்திரிகா குமாரதுங்க “இனப்படுகொலைப் போர்” (புநழெஉனைநறயச) என்று அடையாளப் படுத்தியிருப்பது முக்கியமானதொரு விடயம். அப்படி குறிப்பிடுகின்ற, இனப்படுகொலைப் போரை அவர் அந்தக் காலகட்டத்தில் வழிநடத்தியிருக்கிறார் என்பதும் உண்மையே.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, இனப் படுகொலைப் போர் நடந்ததாக குறிப்பிடும், முப்பது ஆண்டுகளில், 1994 தொடக்கம் 2005 வரையான 9 ஆண்டுகள்



நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு 18 ஆம் திகதி போரில் உயிரிழந்தவர்களுக்காக தனது இல்லத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்திய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஈழத்தில் முன்னெடுக்கப்பட்ட போர் இனப்படுகொலைப் போர் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சந்திரிகா குமாரதுங்க தனது முகநூல் பக்கத்தில், “ஒரு நாட்டையோ மனித இனத்தையோ போராலோ, வெற்றியாலோ தோற்கடிக்க முடியாது என்றும், முப்பது வருட இனப்படுகொலைப் போரில், நாம் இழந்தவை ஏராளம்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில்தான், தமிழர்களுக்கு எதிரான போர் முழுவேகம் பெற்றது. தனது ஆட்சியிலேயே 75 சதவீதமான போரை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டதாகவும், எஞ்சிய 25 சதவீதமான போரையே மஹிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டு வந்தார் என்றும் சந்திரிகா சில ஆண்டுகளுக்கு முன்னர், கூறியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

**இனஅழிப்புப் போர் முக்கிய சாட்சியம்**

அண்மைக் காலத்தில் சந்திரிகா குமாரதுங்க நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தாலும், இனப்படுகொலைப் போரில் அவரும் இழப்புக்களைச் சந்தித்திருந்தாலும், அவரை விட மோசமான இழப்புக்களையும், அழிவுகளையும் தமிழர்கள் சந்தித்திருக்கிறார்கள்.

அதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதால்தான், அவர் தனது இல்லத்தில் 2022 ஆம் ஆண்டு மே 18 ஆம் நாளை நினைவு கூர்ந்திருக்கிறார்.

நடந்தது இனப்படுகொலைப் போர் என்ற அவரது

தொடர்ச்சி▼










# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை...!

**தொடர்ச்சி▲**

பதிவு, இன்றைய நிலையில் இனஅழிப்புப் போர் என்பதற்கு முக்கியமானதொரு சாட்சியம்.

2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி இனப்படு கொலை மூலம், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ராஜபக்ஷ அரசு சர்வதேச ஆதரவுடன் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற அடையாளத்துடன் முன்னெடுத்த போர் முற்று முழுதாகத் தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்டது.

தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போரில் தமிழ ரின் இருப்பையும், அடையாளங்களையும் அழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

**ஆஸ்திரேலிய மாநில நாடாளுமன்ற அங்கீகாரம்**

நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றம் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என் பதை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு மே 18 ஆம் திகதியைத் தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக அங்கீகரித்துள்ளது.

இந்த மிக முக்கியமான நாளில், ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதியைத் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரித்துள்ளது நியூ சவுத் வேல்ஸ் முதல் ஆஸ்திரேலிய மாநில நாடாளுமன்றம்.

2022 மே 18ஆம் நிறைவேற்றப்பட்ட பிரேரணை யானது தமிழ் சமூகத்தின் பல உறுப்பினர்களின் பல வருட கடின உழைப்பு மற்றும் வாதத்தின் உச்சக் கட்டத் தின் விளைவாகும்.

இலங்கைத் தீவில் அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிர ான இனப்படுகொலை பல மனித உரிமை மீறல்களையும், நீதியை நாடும் சர்வதேச சமூகத்தையும் எதிர்கொள்கிறது. இந்த அட்டூழியங்களுக்குக் காரணமானவர்கள் கணக்குக் காட்டப்படுவதை உறுதிசெய்ய நிறைய வேலைகள் காத்திருக்கின்றன.

தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தில், தீவில் அமைதி, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத் துவதற்கு நாங்கள் மீண்டும் உறுதியளிக்கிறோம் என நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ஆஸ்திரேலியாவில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி**

ஆஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கொண்டுவரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மான மானது, முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி தினத்தை அங்கிகரித்ததோடு இங்கு வாழும் தமிழர்கள் ஆஸ்திரேலியாவின் பல்கலாச்சார சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்புகளையும் உள்ளடக்கி அமைந்துள்ளது.

18 மே 2009 இல் இலங்கையின் 26 ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவின் நிறைவைக் குறிக்கிறது. இலங்கை உள்நாட்டுப் போரில் குறைந்தது 100,000 பேர் கொல்லப்பட்டனர் ஐக்கிய நாடுகள் சபை மதிப பிடுகிறது.

ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள பல்லாயிரக் கணக்கான தமிழ் அகதிகள் மற்றும் அவர்கள் நமது பன்முக கலாச்சார சமூகத்துக்குச் செய்யும் பங்களிப்புகள் அளம்பெரியவை.

**கனடா நாடாளுமன்றும் தமிழ் இனப்படுகொலைய அங்கீகரித்தது**

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என்று கனேடிய நாடாளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஏற்று கனடா நாடாளுமன்றம் அங்கீகரித்தது.

இதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையை ஏற்று அங்கீகரித்த உலகின் முதல் நாடாளுமன்றமாக கனடா நாடாளுமன்றம் அமைந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இதற்கான பிரேரணையை ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் தொகுதி (Scarborough-Rouge Park) கனேடிய – தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி (Gary Anandasangaree) 19.05.2022 இல் முன்வைத்தனர்.

இந்த பிரேரணேயை நாடாளுமன்றில் அனைத்து கட்சிகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட நிலையில் தமிழ் இனப்படுகொலைத் தீர்மானம் ஏகமனதாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை தினமாக ஏற்று அங்கீகரிக்கும் உலகின் முதலாவது நாடாளு மன்றம் கனடாவாகும் என ஹரி ஆனந்தசங்கரி தெரிவித் துள்ளார்.

கனடா நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது பல வருடகால உழைப்பாகும். தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பலரது உழைப்பின் உச்ச விளை வாக இது நடந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு வவுனியாவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

(கி.வசந்தன்)

இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களின் நினைவு நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை (18) வடக்கு, கிழக்கில் பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகள் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன.

அந்தணர் ஒன்றியத்தின் ஆலோசகர் ஜெயந்திநாத குருக்கள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொதுமக்கள், அடியார்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு ஆத்மசாந்தி வேண்டி தீபமேற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.













# முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவேந்தல் மன்னாரில் இன்று

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தமிழினப் படுகொலையின் (மே-18) 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று வடக்கு, கிழக்கு தமிழர் பிரதேசங்களில் நினைவு கூரப்பட்டு வரும் நிலையில் மன்னாரிலும் நினைவு கூரப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் நகரப் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை (18) காலை 9 மணியளவில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி பகிரப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் அருட் தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



















# முள்ளிவாய்காலில் உயிர்நீத்த உறவுகளுக்காக ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ரவிகரன் எம்.பி.

## நந்திக் கடலில் மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி

**(விஜயரத்தினம் சரவணன்)**

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளுக்காக, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இன்று (18) வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்னைகளில் ஈடுபட்டார்.

இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி சார்பா கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குத் தெரிவாகியிருக்கும் இரத்தினம் ஜெகதீசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தொண்டர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் நந்திக்கடலில் மலர்தூவி, சுடரேற்றி உணர்வு பூர்வமாக அஞ் சலி செலுத்தப்பட்டது.

எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக் கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினோம் என்று இதன்போது தெரிவித்தார் ரவிகரன் எம்.பி.



# படுகொலை செய்யப்பட்ட குழந்தைகளை நினைந்து சிறார்கள் விளக்கேற்றி அஞ்சலி!

இறுதி போர் உள்ளிட்ட அரச படை நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட சிறார்களை நினைவு கூர்ந்து சிறுவர்களின் பங்கேற்புடன், வலிகாமம் கிழக்கு வாதரவத்தை, வீரவாணி ஞானவாணி சனசமூக நிலையத்தில் நேற்று சனிக்கிழமை மாலை உணர்வு பூர்வமாக அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

சமூக செயற்பாட்டாளர் சிவராசா ரூபன் தலைமையில் அஞ்சலிச் சுடரை போரில் மகனை இழந்த தந்தை எஸ். சுந்தரவேல் ஏற்றினார். போரில் சிறுவர்களுக்கு எதிராக அரசு மேற்கொண்ட தாக்குதல்களின் கோரத்தையும் அது தொடர்பில் பொறுப்புக் கூறப்படாமை மற்றும் மறுக்கப்பட்ட நீதி தொடர்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் அஞ்சலியுரையாற்றினார்.

சனசமூக நிலைய நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளில் மனிதாபிமானமற்ற முறையில் கோரமாக படுகொலை செய்யப்பட்ட ஆயிரக் கணக்கான சிறுவர்களை நினைவு கூர்ந்து 16 தீபங்கள் ஏற்றப்பட்டு அஞ்சலிப் பிரார்த்தனை இடம்பெற்றது. போரின் பின்பாக கடந்த 16 ஆண்டுகளாக நாம் நீதி கிட்டாதவர்களாக அடக்குமுறைக்குள் ஏங்குகின்றோம் என்பதை மையப்படுத்தியதாகவே 16 தீபங்கள் ஏற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து போருக்குப் பின்னர் முள்ளிவாய்க்கால் இறுதி போரில் வலிந்து காணாமலாக்கப்பட்டவரின் தாயாரான பா. யோகராணி முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கினார்.

# கனிமொழி உள்ளிட்ட 7 பேர் தலைமையில் எம்.பி.க்கள் குழுவினர் வெளிநாடு பயணம்



எல்லை தாண்டிய தீவிரவாதத்தை ஊக்குவித்து வரும் பாகிஸ்தான் குறித்து, உலக நாடுகளின் தலைவர்களிடம் ஆதாரத்துடன் விளக்கும் விதமாக ரவிசங்கர் பிரசாத், சசித ரூர், கனிமொழி உட்பட 7 பேர் தலைமையில் எம்.பி.க்கள் குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

இந்த குழுவினர் பிரிட்டன், வளைகுடா நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளுக்கும் 10 நாள்கள் பயணம் மேற் கொண்டு, இந்தியாவின் நிலை குறித்து விளக்க உள்ளனர்.

காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் கடந்த மாதம் 22 ஆம் திகதி நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலா பயணி கள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இதில் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு நேரடி தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, கடந்த 7 ஆம் திகதி 'ஒபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது. இதில் 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ் தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள எல்லை பகுதிகளை குறிவைத்து ட்ரோன்கள், ஏவுகணைகளை பாகிஸ்தான் வீசியது.

இந்திய படைகள் தனது அதிநவீன ஆயுதங்களின் உதவி யுடன் அவை அனைத்தையும் நடுவானிலேயே தகர்த்து அழித்தது. இந்த மோதல் ஒருசில நாள்கள் நீடித்த நிலை யில், பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை ஏற்று கடந்த 10 ஆம் திகதி போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது.

எனினும், பாகிஸ்தான் அத்துமீறினால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித் துள்ளது.

இந்த நிலையில், தீவிரவாதிகளுக்கு தஞ்சம் அளிப்பது, நிதிஉதவி வழங்குவது, எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு உதவி செய்வது என தொடர்ந்து பல ஆண்டுகளாகவே தீவிர வாதத்துக்கு ஆதரவாக பாகிஸ்தான் செயல்பட்டு வருவது குறித்து உலக நாடுகளிடம் ஆதாரங்களுடன் விளக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக, அனைத்து கட்சி எம்.பி.க்கள் அடங்கிய 7 குழுக்களை உலகின் பல நாடுகளுக்கும் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. ரவிசங்கர் பிரசாத், வைஜெயந்த் பாண்டா (பா.ஜ.க), சசி தரூர் (காங்கிரஸ்), கனிமொழி (தி.மு.க), சஞ்சய் குமார் ஜா (ஐ.ஜ.த), சுப்ரியா சுலே (என்.சி.பி - சரத்பவார்), ஸ்ரீகாந்த் ஏக்நாத் ஷிண்டே (சிவசேனா) ஆகிய 7 எம்.பி.க்க ளும் அந்த குழுக்களுக்கு தலைமை வகிப்பார்கள். ஒவ் வொரு குழுவிலும் பா.ஜ.க, காங்கிரஸ், தி.மு.க, திரிணமூல், ஐ.ஜ.த, என்.சி.பி (சரத் பவார்), பிஜு ஜனதா தளம், சிவ சேனா (உத்தவ்), மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் ஆகிய கட்சி களை சேர்ந்த 5 முதல் 8 எம்.பி.க்கள் இடம்பெறுவார்கள். வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவரும் இக்குழுவில் இடம்பெறுவார். இந்த குழுக்களின் ஒருங்கி ணைப்பாளராக நாடாளுமன்ற விவகார துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு இருப்பார்.

இந்த குழுவினர் பிரிட்டன், ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான், தென் ஆப்பிரிக்கா உட்பட பல்வேறு நாடுகளுக்கு 10 நாள்கள் பயணம் மேற்கொள்வார்கள். இந்த பயணம் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடங்குகிறது என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு நேற்று தெரிவித்தார்.

இந்த பயணத்தின்போது, பாகிஸ்தானின் தீவிரவாத ஆதரவு செயல்பாடுகள், பஹல்காம் தாக்குதலின் பின் னணி, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானின் பொய் பிரச்சாரங்கள் ஆகியவை குறித்து உலக நாடுகளின் தலைவர்களிடம் எம்.பி.க்கள் ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்கள்.

இந்தியாவுக்கு எதிராக இதுவரை நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களில் பாகிஸ்தானுக்கு உள்ள தொடர்பு, இதில் அந்த நாட்டின் இராணுவம், உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. ஆகியவை எவ்வாறு பின்னி பிணைந்துள்ளன என்பதற் கான முழு ஆதாரங்களை வெளியுறவு துறை, நாடாளுமன்ற விவகார துறை, உள்துறை அமைச்சகங்கள் இணைந்து ஆவணங்களாக தயாரித்து வருகின்றன. எம்.பி.க்கள் குழுவினரிடம் இந்த ஆவணங்கள் வழங்கப்பட உள்ளன. அவற்றின் மூலம் உலக நாடுகளின் தலைவர்களுக்கு இந் திய எம்.பி.க்கள் விளக்கம் அளிக்க உள்ளனர்.

# ஹைதராபாத்தில் தீ விபத்து: 17 பேர் பலி, பலர் படுகாயம்




ஹைதராபாத்தில் புகழ்பெற்ற சார்மினார் நினைவுச் சின் னம் அருகே உள்ள ஒரு கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். மின்கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்து குறித்து தீயணைப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "அதிகாலை 6,30 மணியளவில் தீ விபத்து குறித்து தகவல் வந்தது. உடனடியாக அங்கு விரைந்தோம். தீயணைப்பில் 11 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன. பலர் உயிரிழந்தனர். சிலரைக் காயங்களுடன் மீட்டோம். அவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்." என்றார்.

மத்திய அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி குறிப்பிடுகையில், "சார்மினார் நினைவுச் சின்னம் அருகே நகைக் கடைகள் அதிகம் நிறைந்த குல்சார் ஹவுஸ் பகுதியில் ஒரு நகைக் கடைக்கு மேல் உள்ள வீட்டில் உள்ளோர் இந்த விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நான் நேரில் சந்தித்தேன். இது ஒரு துயரச் சம்பவம். இந்த விபத்து தொடர்பாக நான் யாரையும் குறைகூற விரும்பவில்லை. ஆனால் பொலிஸார், நகராட்சி, தீயணைப்புத் துறையினர் என அனைவரும் எப்போதும் முழு பலத்துடன் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இன்று இந்த விபத்தில் வேகமாக செயல்பட, தீயணைப்புத் துறையிடம் போதிய உபகரணங்கள் இல்லை என்ற தக வலை அறிந்தேன். எதிர்காலத்தில் இதுபோன்ற துறையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும். உயிரிழந்தவர்க ளின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி பெற்றுத் தருவது குறித்து நான் பிரதமர் நரேந்திர மோடியிடம் பேசவிருக்கி றேன்." என்றார்.

முதல்வர் ரேவந்த் ரெட்டி, இந்த விபத்து குறித்து அதிர்ச் சியை வெளிப்படுத்தியதோடு, காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கிட உத்தரவிட்டுள்ளதாகக் கூறினார்.

தெலுங்கானா அமைச்சர் பொன்னம் பிரபாகர், "விபத்தில் உயிரிழந்தோரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. விரைவில் முழுத் தகவலையும் அரசு பகிரும்." என்றார்.

இதுதொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"ஹைதராபாத் தீ விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து வேதனை அடைகிறோம். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள் கிறோம். காயமடைந்தோர் விரைவில் குணமடையட்டும். பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் இந்திய ரூபா நிவாரணம் வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் இந்திய ரூபா வழங்கப்படும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இஸ்ரேலின் தாக்குதலில் காசாவில் 146 பேர் பலி

காசாவில் இஸ்ரேலின் புதிய வான் வழி தாக்குதலில் 24 மணி நேரத்தில் 146 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் சுமார் 1,200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். சுமார் 250 இஸ்ரேலியர்களை பணய கைதிகளாக ஹமாஸ் தீவிரவாதிகள் பிடித்துச் சென்றனர்.

இதையடுத்து ஹமாஸ்அமைப்பு மீது போர் தொடுத்த இஸ்ரேல் காசாவில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளையில் பணய கைதிகளில் பலரை போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் மீட்டுள்ளது.

இந்நிலையில், காசா மீது இஸ்ரேல் கடந்த வியாழக்கிழமை முதல் கடும் வான் வழித் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் 24 மணி நேரத்தில் 146 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். 450 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்த உடன்பாடு கடந்த மார்ச் மாதம் முடிவுக்கு வந்த பிறகு காசா மீதான கடுமையான தாக்குதல்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது மத்திய கிழக்கு நாடுகள் பயணத்தை, புதிய போர் நிறுத்தத்தை நோக்கி எந்த முன்னேற்றமும் இல்லாமல் கடந்த வெள்ளிக்கிழமை முடித்துள்ள நிலையில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.









# மெக்ஸிகோ கடற்படையின் படகு விபத்து: இருவர் பலி

நியூயோர்க்கில் உள்ள புரூக்ளின் பாலத்தில் மெக்ஸிகோ கடற்படையின் பயிற்சி படகு ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள் ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

மேற்படி விபத்தில் 19 பேர் காயமடைந்துள் ளனர். அவர்களில் இருவரின் நிலைமை கவ லைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த படகில் சுமார் 277 பேர் பயணித்துள்ள னர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ட்ரம்ப் – புடின் தொலைபேசி உரையாடல் போரை முடிவுக்குக் கொண்டுவர முயற்சி





ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினு டன் நாளை காலை 10.00 மணிக்கு தொலைபேசியில் உரையாட உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் – ரஷ்யா போரை முடிவுக் குக் கொண்டுவருவது தொடர்பில் இதன் போது உரையாட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ரஷ்ய ஜனாதிபதியுடன் உரையாடிய பின்னர் டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மற்றும் சில நேட்டோ நாடுகளின் தலைவர்களுடன் தனித் தனியாக உரையாடவுள்ளதாகவும் அவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும் இந்த உரையாடல் பயனுள் ளதாக இருக்கும் என்று நம்புவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 18/05/2025

## இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு




கனடாவின் மொன்றியலில் கடந்த சனிக் கிழமை அதி காலை சுமார் 4 மணியள

03

# 22 மில்லியன் கனேடியர்களுக்கு வரிவிலக்கு அறிவித்த கனடா அரசு

**நடுத்தர வர்க்க மக்களுக்கு கனடா அரசு பாரிய வரிச்சலுகையை அறிவித்துள்ளது**



2025 ஜூலை 1 முதல் குறைந்த வரி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து இலிருந்து 14 சதவீதமாக குறைக்கப்படுவதாக கனேடிய அரசு அறிவித்துள்ளது.

இதன் மூலம் இரண்டு வருமானம் உள்ள குடும்பங்கள் ஆண்டுக்கு அதிகபட்சம் 840 கனேடிய டொலர் வரை சேமிக்க முடியும்.

இந்த வரிவிலக்கு திட்டம், 2025-26 ஆம் ஆண்டிலில் தொடங்கி 5 ஆண்டுகளில் 27 பில்லியன் டொலர் மதிப்புள்ள வரி சுமையை குறைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

03

# டொரோண்டோவில் வாகனத்தில் மோதுண்ட பெண் ஒருவர் பலி




கனடா, டொரோண்டோவில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஸ்கார்பரோ பகுதியில் வாகனம் மோதியதில் 32 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய கார் கண்டுபிடிக்கப்பட்டாலும், அந்த காரின் சாரதி இதுவரை பிடிபடவில்லை என்று டொரோண்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஹுண்டாய் சோனாடா மொடல் கார், விபத்து நடந்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்தில் உள்ள

03




# கனடாவில் இருந்து பிரான்ஸுக்கு நாடு கடத்தப்படவுள்ள தமிழர்

2022ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் அருகே ஒரு போட்டி கும்பல் மீது நடந்த தாக்குதலில் ஈடுபட்டார் என கூறப்படும் குற்றச்சாட்டில் கடந்த ஆண்டு டொராண்டோவில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஆவாகுழு தலைவரை நாடு கடத்த ஒன்ராறியோ நீதிபதி அனுமதி அளித்துள்ளார்.

டொராண்டோ தெற்கு தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரசன்னா நல்லலிங்கம், கனடாவின் நீதித்துறை அமைச்சரின் ஒப்புதலுக்காக காத்திருக்கும் நிலையில் 30 நாள்களுக்குப் பின்னர் பிரான்ஸிடம் ஒப்படைக்கப்படுவார்.

வழக்கின் ஒரு சர்ச்சைக்குரிய பதிவின்படி, செப்டம்பர் 21, 2022 அன்று, நல்லலிங்கம் ஆவா கும்பலின் நான்கு உறுப்பினர்களுக்கு ஆயுதங்களை வழங்கினார், மேலும் போட்டி கும்பலின் "வாகனத்தை அடித்து நொருக்க" பாரிஸின் வடக்கு புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள லா கோர்னியூவ் என்ற கம்யூனுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

நள்ளிரவுக்கு சற்று முன்பு, அந்தக் குழு இரண்டு கார்களில் லா கோர்னியூவுக்குச் சென்றது. பாதுகாப்பு காட்சிகளில், நல்லலிங்கத்தின் கூட்டாளிகள் எனக் கூறப்படும் நான்கு பேர், வாகனங்களில் ஒன்றிலிருந்து வெளியேறி, வாள்கள், மற்றும் கத்திகளைப் பயன்படுத்தி போட்டியாளரின் காரையும், இறுதியில் அதில் இருந்தவர்களையும் தாக்குவது கண்டறியப்பட்டது. தாக்குதல் நடத்தப்பட்டபோது, நல்லலிங்கம் என்று அவரது வழக்கறிஞர்களால் கூறப்படும் ஒருவர், இரண்டு வாகனங்களில் ஒன்றின் உள்ளேயே இருந்தார்.

சம்பவ இடத்திற்கு வந்த பிரெஞ்சு அதிகாரிகள், இரண்டு பாதிக்கப்பட்டவர்கள் காயமடைந்த நிலையில் இருப்பதைக் கண்டனர். ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

குடியேற்ற விசாரணைக்கு முன்னிலையாக தவறியதால், மே 2024 இல் டொராண்டோவில் நல்லலிங்கம் கைது செய்யப்பட்டார். சில வாரங்களுக்குள், நிலுவையில் உள்ள பிடியாணையில் அவரை நாடு கடத்த பிரான்ஸ் விண்ணப்பித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த விசாரணை பெரும்பாலும் ஒரு குறுகிய பிரச்சினையாக மாறியது: நல்லலிங்கம் தனது கூட்டாளிகள் வாகனத்தில் இருந்தவர்களைத் தாக்க திட்டமிட்டிருந்தார் என்பதற்கான போதுமான ஆதாரங்களை பிரெஞ்சு அதிகாரிகள் சேகரித்திருந்தார்களா என்பதுதான்.

நல்லலிங்கத்தின் வழக்கறிஞர்கள் தங்கள் கட்சிக்காரர் ஆவா உறுப்பினர்களுக்கு காரை அடித்து நொருக்குமாறு அறிவுறுத்தியதாக ஒப்புக்கொண்டனர் – ஆனால் அது மேலும் அதிகரிக்கும் என்று அவருக்குத் தெரிந்ததற்கான ஆதாரங்கள் இல்லை என்று வாதிட்டனர்.

"பிரான்ஸ் உங்களிடம் கேட்கிறது என்னவென்றால், இந்த நபர் ஆவாவின் தலைவர் என்பதால், செய்யப்பட்ட எதுவும் அவரது உத்தரவின் பேரில் செய்யப்பட்டது என்பதைக் கண்டறிய வேண்டும்," என்று பாதுகாப்பு வழக்கறிஞர் மார்க் எர்டெல் உயர் நீதிமன்ற நீதிபதி மோகன் சர்மாவிடம் கூறினார்.

பிரான்ஸ் குடியரசின் சார்பாக முன்னிலையான அரச வழக்கறிஞர் கிரோன்கில், ஆவா கும்பலின் தலைவராக இந்த சம்பவத்தை திட்டமிட்டு நடத்தியதால், அவரது வன்முறை வரலாறு மற்றும் நீண்ட குற்றப் பதிவைக் கருத்தில் கொண்டு, நல்லலிங்கம் தனது போட்டியாளர்களுக்கு தீங்கு விளைவிக்க எண்ணியதாக ஊகிப்பது நியாயமானது என்று வாதிட்டார்.

2016 ஆம் ஆண்டு சிவகுமாரன் ஜீவரத்னாவின் கொலை தொடர்பாக இலங்கையில் கொலைக்காக நல்லலிங்கம் தேடப்படுகிறார். சம்பவத்திற்குப் பிறகு அவர் நாட்டை விட்டு பிரான்சுக்கு தப்பிச் சென்றதாக இலங்கை அதிகாரிகள் நம்புவதாகக் கூறுகின்றனர்.

லு கோர்னியூவில் தாக்குதல் நடந்த நேரத்தில், நல்லலிங்கம் ஏற்கனவே பிரெஞ்சு அதிகாரிகளுக்குத் தெரிந்தவராக இருந்தார் – 2021 ஆம் ஆண்டில், பாரிஸில் உள்ள ஒரு உணவகத்தில் நடந்த சோதனையில் பங்கேற்றதற்காக பாரிஸ் குற்றவியல் நீதிமன்றத்தால் அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது, அவற்றில் இரண்டு ஆண்டுகள் இடைநிறுத்தப்பட்டன. அவரது தண்டனையின் இறுதி ஆண்டு ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை என்று அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்.

டிசம்பர் 2022 இல், கியூபெக்கில் உள்ள ரோக்ஸாம் சாலையில் உள்ள அங்கீகரிக்கப்படாத சோதனைச் சாவடியில் ஒரு மோசடி பெயரைப் பயன்படுத்தி நல்லலிங்கம் அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் நுழைந்ததாக நீதிமன்ற ஆவணங்கள் கூறுகின்றன. நல்லலிங்கம் எப்படி அல்லது எப்போது அமெரிக்காவிற்குள் நுழைந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

எல்லா வழக்குகளையும் போலவே, நல்லலிங்கத்தை நாடுகடத்துவது குறித்த இறுதி முடிவு மத்திய நீதி அமைச்சரிடம் உள்ளது, அவர் செயல்முறையை நிறுத்த அல்லது முப்பது நாட்கள் வரை மேலதிக நிபந்தனைகளை விதிக்க சமர்ப்பிப்புகளைப் பெறலாம். இந்த முடிவை ஒன்ராறியோவின் உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். அந்த வழக்கில், மேல்முறையீட்டு நீதிமன்றம் நாடுகடத்தல் செயல்முறை குறித்து இறுதி முடிவை எடுக்கும் வரை ஒருவரை நாடுகடத்த முடியாது.

நல்லலிங்கத்தின் வழக்கறிஞர்கள், அமைச்சரிடம் சமர்ப்பிப்புகளைச் செய்து, பிரான்ஸிடம் அவர் சரணடைவதைத் தடுக்க மேலும் வழிகளைப் பின்பற்றத் திட்டமிட்டுள்ளதாகக் கூறுகிறார்கள்.



# டொரோண்டோவில் கென்யா அகதி மரணம்

## மேம்பட்ட மனநல ஆதரவு தேவை

கடந்த மாத இறுதியில் டொரோண்டோவின் நார்த் யார்க் பகுதியில் உள்ள அகதிகளுக்கான தங்குமிடத்தில் மரணமடைந்த கென்யா அகதிக்கு,போதுமான மனநல ஆதரவு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை கென்யா சமூகத்தினர் மற்றும் ஆபிரிக்க அகதிகளின் உரிமை மற்றும் நலனுக்காக போராடும் அமைப்புகள் எழுப்பியுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதான எட்வின் கிப்லகாட், ஏப்ரல் 30 அன்று டொரோண்டோ நகராட்சியின் “Willowdale Welcome Centre” அகதி தங்குமிடத்தில் உயிரிழந்தார்.

கிப்லகாட், மேற்கு கென்யாவின் எல்கெயோ மராக்வேட் மாவட்டத்திலுள்ள இடென் நகரத்தைச் சேர்ந்தவர்.

2023 செப்டம்பரில் தனது குடும்பத்துக்கு ஒரு நல்ல எதிர்காலம் தேடி கனடாவுக்கு வந்தார். ஆனால் கனடாவில் நிலைத்த வேலை மற்றும் வீடு கிடைக்காததால் கடுமையான சவால்கள் சந்திக்க நேர்ந்தது. அதிக அழுத்தங்களை சமாளிக்க முடியாமல் கிப்லகாட் மது பழக்கத்தில் சிக்கி விட்டார் என ஆபிரிக்க கனடியர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எடி ஜும்பா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை North York இல் உள்ள Dominion Church இல் அவரது நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெறஉள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் றொறன்ரோ பெரும்பாக பகுதியில் மனநல பிரச்சினைகள் மற்றும் தவறான முடிவு காரணமாக நான்கு அல்லது ஐந்து கென்யா அகதிகள் உயிரிழந்துள்ளனர்.

## 22 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2025-ஆம் ஆண்டுக்கான முழு ஆண்டு வரி விகிதம் 14.5 சதவீதமாக இருக்கும், 2026 முதல் 14 சதவீதமாக நிலைத்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தால், 57,375 டொலருக்கும் குறைவான வருமானம் உள்ளவர்களும், 114,750 டொலர் வரை வருமானம் உள்ளவர்களும் பெரிதும் பயனடைகின்றனர்.

கனடாவில் 1.5 மில்லியனுக்கும் அதிகமாக இந்தியர்கள் வாழ்கின்றனர். இவர்களில் பலர் இத்திட்டத்தின் கீழ் நன்மை பெறவுள்ளனர்.

மேலும், கனடா வருமான வரித்துறை (CRA), 2025 ஜுலை-டிசம்பர் மாதங்களுக்கான புதிய வரி விலக்கு பட்டியலை வெளியிடும். இதன்மூலம் ஊதியத்திலேயே குறைந்த அளவு வரி பிடித்தம் செய்யப்படும். இல்லையெனில், 2025 ஆண்டுக்கான வரி தாக்கல் செய்யும்போது இந்த வரிவிலக்கு அனுபவிக்கப்படலாம்.

மேலும், அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள வரி பிரச்சினைக்கு தீர்வாக, கனடா அரசு வாகன உற்பத்தியாளர்கள், உணவுப் பொருள் பாக்கேஜிங், தேசிய பாதுகாப்பு தொடர்பான அமெரிக்க இறக்குமதிகளுக்கு 6 மாத தற்காலிக வரி விலக்கை அறிவித்துள்ளது.

இது கனடாவில் வாழும் இந்தியர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் நம்பிக்கை அளிக்கக்கூடிய அறிவிப்பாகும்.

## இளைஞன் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வில் இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெலி மெரி Ville-Marie பகுதியில் உள்ள ஸெர்புருக் Sherbrooke தெருவும் டெய்பிர்வில் d'Iberville தெருவும் சந்திக்கும் இடத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குற்றவாளி ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் இளைஞரை அணுகி கொள்ளை அடிக்க முயற்சித்ததாக கூறப்படுகிறது.

அந்த நேரத்தில் தகராறு ஏற்பட்டதாகவும், அதன் போது ஒருவர் துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரியவந்துள்ளது.

அந்த குண்டு இளைஞரின் கீழ்க் கால்பகுதியில் பாய்ந்துள்ளது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருவதற்கு முன்பே சந்தேக நபர் தப்பியோடியுள்ளார். இதுவரை அவரை அடையாளம் காண முடியவில்லை.

காயமடைந்த இளைஞர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது உயிருக்கு ஆபத்தில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## டொரோண்டே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

Sheppard Avenue East பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸார் அந்த காரின் புகைப்படங்களை வெளியிட்டனர்.

விபத்து இடம்பெற்ற தினத்தில், இரவு 9 மணிக்கு பிறகு. Sheppard Avenue Easவ மற்றும் Bridlewood Boulevard சந்திப்பில், அந்த பெண் சாலையை கடக்கும்போது கிழக்கே சென்றுக் கொண்டிருந்த சோனாடா கார் அவர் மீது மோதியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திலேயே அவர் மரணித்துள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவரது அடையாளம் இதுவரை வெளியிடப்படவில்லை.